
# The Bible Standard

(தமிழ் வெளியீடு)



“உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.

அவைகள் என்னை நடத்தும்.” சங். 43:3

**“LIFT UP A STANDARD FOR THE PEOPLE”**
**Isaiah 62 : 10**

**Translated from BS 887 & 884**
**Published on Oct 23, 2015**

பொருளடக்கம்

மெய்யான கிறிஸ்தவன் எப்படிப்பட்டவன் ......... 2

யோசியா – இளம் வயது ராஜா ................. 12

**BS Tamil Version - 30** **2015**

Searching for TRUTH

# மெய்யான கிறிஸ்தவன் எப்படிப்பட்டவன்?

சத்தியத்திற்கான தேடுதல்

*What is a Real Christian*

BS#887

பிரசித்திபெற்ற சுவிசேஷகர்களின் மாபெரும் முகாம்கள், மற்றும் கூட்டங்களில் பெருமளவு வருகைப் பதிவு மற்றும் ஆயிரக்கணக்கான "மனந்திரும்புதல்கள்" பற்றிய அறிக்கை அளிக்கப்படுவதன் மூலம் பொதுமக்களின் கவனம் அதிகமாக கவர்ந்திழுக்கப்படுகிறது. கூடவே சுவிசேஷமானது மிகப் பரவலாக தொலைக்காட்சி, வலைதளம், முகநூல் (ஃபேஸ் புக்), ஐபோன், ஈமெயில் போன்றவை மூலமாக பிரசங்கிக்கப்பட்டு வருவதுடன், நம்முடைய உலக உருண்டையின் ஏறக்குறைய ஒவ்வொரு மூலைக்கும் சென்றடைந்து, ஆயிரக் கணக்கானோர் கிறிஸ்துவிடமாக மனந்திரும்பியிருக்கி றார்கள் என்று அறிக்கையளிக்கப்பட்டுள்ளது.

இப்போதும் சுமார் 7 பில்லியன் உலக மக்கள் தொகையில் 1/3 (32.9%) அளவே கிறிஸ்தவர்கள் இருக்கின்றனர் என்றும் மொத்தத்தில் 2.5 பில்லியன் அளவில் அதிகமான ஆதரவாளர்கள் இருப்பதாகவும் கோரப்படுகிறது. இவர்களில் அநேகர் பெயரளவு கிறிஸ்த வர்கள் மட்டுமே. வருடாந்திர கிறிஸ்தவத்தின் வளர்ச்சி விகிதம் 25 மில்லியன். (மக்கள் தொகையில் 1.36% மட்டும்). இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக் கவும், ஆதரவாயிருக்கவும், நம்முடைய வாசகர்களுக்கு உதவும்படியாக இந்தக் கட்டுரையை நாங்கள் முன்வைப் பதற்கு அதிக எண்ணிக்கையிலுள்ள கிறிஸ்தவர்களே காரணமாக இருக்கிறார்கள்.

காலத்தைக் குறித்த தீர்க்கதரிசனங்கள் நிறை வேறுவதிலிருந்தும், அவ்விஷயத்தின் உண்மைகளி லிருந்தும், மாற். 13 : 33-ல் சொல்லப்பட்டுள்ள "ஜாமக் காரர்களுக்கு" இது தெளிவாயிருக்கிறது. "அக்காலத்தை நீங்கள் அறியாதபடியால், எச்சரிக்கையாயிருங்கள், விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள். 1914-ல் தொடங்கிய தற்போதைய மிகப்பெரிய உபத்திரவ காலம் "**உலகம் உண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவமாயிருக்கும்.**" (மத். 24 : 21)."**பூமியின் மேலுள்ள ஜனங்களுக்குத் தத்த ளிப்பும், இடுக்கணும் உண்டாகும். சமுத்திரமும், அலைகளும்** (மனித சமுதாயத்தின் அமைதியற்ற கட்டுப்பாடற்ற கூறுகள்) **முழக்கமாயிருக்கும்.** (தற்காலத்திலிருக்கிற சமூக ஒழுங்கமைப்பின் அரணுக்கு எதிராக தூண்டு கோலாக வும், அதிகரித்துக் கொண்டுமிருக்கிறது). **....பூமியின் மேல் வரும் ஆபத்துகளுக்குப் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோம்.**" லூக். 21 : 25, 26). "**வெறித்தவனைப் போல் அலைந்து தடுமாறுகிறார்கள்: அவர்களுடைய ஞானமெல்லாம் முழுகிப்போகிறது**" என்று சங். 107 : 27 அறிவிக்கிறது. மனுஷருடைய காரியங் களிலுள்ள, உலகளாவிய நெருக்கடியை மனுஷருடைய முயற்சிகள் யாவும் திறமையுடன் சமாளித்து வெற்றி பெற வலிமையற்றதாயிருப்பதும் வெளிப்படையாயிருக்கிறது.

இந்த சூழ்நிலைகள் ஜனங்களை அதிகமதிகமாக மதசம்பந்தமானவற்றை சிந்திக்கும்படி செய்து அதன் விளைவாக அநேகர் மிகவும் பிரபலமான மதத்திற்கு திரும்புகிறார்கள். (1960 முதல் பிறரைக் கவர்ந்து இழுக்கும் பாணி). ஜனங்கள் குறிப்பிடத்தக்க அளவில் தேவனிடமும், கிறிஸ்துவிடமும்கூட திரும்புகிறார்கள் என்பதற்கான எந்த ஆதாரத்தையும் குறித்து நாங்கள் களிகூருகிறோம். கர்த்தருடைய வழிகளைக் கற்றுக் கொள்வதற்காக, அவர்களில் அநேகர் உண்மையுடனும் சரியான மனப்பான்மையுடனும் தேடுகிறார்கள். தங்கள் தேடுதலில் அவர்கள் விடாமுயற்சியுடன் இருப்பார்கள், ஏனெனில் தேவன் அப்படிப்பட்டவர்களுக்கு காலத்திற் கேற்ற தம்முடைய சத்தியத்தைப் பற்றிய அறிவை வெகுமதியளிப்பதாக வாக்களித்திருக்கிறார். "**சாந்த குணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி, சாந்த குணமுள்ளவர்களுக்குத் தமது வழியைப் போதிக்கிறார்.**" (சங். 25 : 9).

சாத்தானுடைய சாம்ராஜ்யம் கவிழ்க்கப்படுதல் அதிகமதிகமாக, தற்போதைய மகா உபத்திரவ காலத்தில் தொடர்வதால் விசேஷமாக பூமியானது (தற்போதய சமுதாய ஒழுங்கானது) தொடர்ந்து அதிர்ந்து கொண்டு,

**கிறிஸ்தவம் என்பது ஒவ்வொரு ஞாயிறு காலையிலும் நீங்கள் வருகை தருகிற கட்டிடத்தைப் பற்றியதல்ல. இது வாரத்தின் ஒவ்வொரு நாளிலும் நீங்கள் உங்கள் ஜீவியத்தில் எப்படி ஜீவிக்கிறீர்கள் என்பதைப் பற்றியது. நீங்கள் செய்கிற எல்லாவற்றிலும் கிறிஸ்துவைப் பிரதிபலிப்பதை விரும்புங்கள். நீங்கள் ஒரு விசுவாசி என்று மட்டும் சொல்லிக் கொள்ளாதீர்கள். உங்கள் வார்த்தைகள், உங்கள் முன்னுரிமைகள் மற்றும் உங்கள் கிரியைகள் எல்லாவற்றிலும் நீங்கள் அப்படியிருப்பதாக நிரூபியுங்கள்.**


**COURTESY BY :**

THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, Leon Snyder. Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** *www.biblestandard.com*

பர்வதங்கள் (தற்போதுள்ள ஏகாதிபத்திய அரசாங்கங்கள்) கர்த்தருடைய பிரசன்னத்தினால் மெழுகுபோல உருகிக் கொண்டிருக்கிறது. (படிப்படியாக, பொதுமக்களின் கோரிக் கைகளுக்கு இறங்கி வந்து விடும்) (சங். 97 : 4, 5). இந்த தற்போதைய பொல்லாத உலக சமுதாயத்தின் பல்வே றான கூறுகள் வெந்து உருகிப் போகும். ஜனங்கள் அதிகமதிகமாக மதசம்பந்தமான காரியங்களைப் பற்றி சிந்திக்கும்படியாக நடத்தப்படுவதுடன் தங்களைச் சுற்றி நடக்கும் புதுமையான நிகழ்வுகளுக்கான விவரங்களை அறிய முயற்சிப்பார்கள். 2 பேது. 3 : 10 –ஆம் வசனம் இந்த கருத்தை மிகவும் தெளிவாகக் கூறுகிறது. "**கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும். அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும், அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்து போகும்.**" ஆம் ஜனங்கள் மதசம்பந்தமான காரியங்களைப் பற்றி அதிகமதிகமாக சிந்திக்கும்படியாக வழிநடத்தப்படுவதுடன் அவர்கள் தங்களைச் சுற்றி நடக்கும் புதுமையான நிகழ்வுகளுக்கான விவரத்தை அறிய ஆராய்ந்து பார்ப்பார்கள்.

படிப்படியாக அவர்கள் தேவனுடைய வார்த்தை யில் கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களுக்குத் திரும்பும்படி நடத்தப்படுவர்கள்; அதாவது அந்த கல் (தேவனுடைய ராஜ்யம்) அந்த சிலையின் (இந்த உலகத்தின் ராஜ்யங்கள்) மீது மோதி, மெய்யாகவே அதை உடைத்து தூளாக்கி வளர்ந்து பர்வதமாகி பூமி முழுவதையும் நிரப்பிக் கொண்டிருக்கிறது; "**அந்த ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார்: அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை, ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து, உருண்டு வந்து இரும்பையும், வெண்கலத்தையும், களிமண்ணையும், வெள்ளியையும், பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி தானோ என்றென்றைக்கும் நிற்கும். இனிமேல் சம்பவிக்கப் போகிறதை மகா தேவன் ராஜாவுக்குத் தெரிவித்திருக்கிறார்: சொப்பனமானது நிச்சயம், அதின் அர்த்தம் சத்தியம்.**" (தானி. 2 : 44, 45). அதாவது கர்த்தருடைய கோபத்தின் இந்த நாளிலே அவர் மனுஷர் மீது இடுக்கணைக் கொண்டு வருகிறார், அவர்கள் குருடரைப்

> "அப்பொழுது ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய (YHWH) நாமத்தைத் தொழுது கொண்டு, ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு, நான் அவர்கள் பாஷையைச் சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவேன்." – செப். 3 : 9.
>
> முந்தின வசனம் (செப். 3 : 8) பற்றி சில சுவாரஸ்யமான விஷயங்கள் இருக்கின்றன.... எபிரெய எழுத்துக்களில் – (Hebrew alphabet - எபிரேய மொழியின் எழுத்துத் தொகுதி) – உள்ள ஒவ்வொரு தனி எழுத்தையும் இது கொண்டிருக்கிறது, முடிவான 'ஐந்து' வடிவங்களையும் உள்ளடக்கியுள்ளது. வேதாகமம் முழுவதிலும் இதைப்போன்ற வேறு ஒரு வசனம் எதுவும் இல்லை. 100 –க்கும் குறைவான வருட பகுதியில் எபிரேய பாஷை "மரித்துப்போன" மொழியாக (வழக்கத்தில் அழிந்து போன மொழியாக) கருதப்பட்டது, இப்போது லட்சக்கணக்கானோரால் அது கற்றுக் கொள்ளப்பட்டு வருகிறது.




"பூமியின் எல்லைகளெல்லாம் நினைவுகூர்ந்து கர்த்தரிடத்தில் திரும்பும், ஜாதிகளுடைய சந்ததிகளெல்லாம் உமது சமூகத்தில் தொழுது கொள்ளும். ராஜ்யம் கர்த்தருடையது; அவர் ஜாதிகளை ஆளுகிறவர்." சங். 22 : 27–28

போல நடக்கிறார்கள். (எதைப் பின்பற்ற வேண்டும் என்று அறியாதவர்களாய், நிச்சயமற்ற நிலையில் தடவித்திரி கிறார்கள்.) அவர்களுடைய இரத்தம் புழுதியைப் போல சொரியப்பட்டது, ஏனெனில் அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக பாவஞ்செய்தார்கள்; பூமியெல்லாம் தேவ னுடைய எரிச்சலின் அக்கினியால் அழியும், ஜனங்க ளெல்லாரும் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும் படிக்கு அவர் அவர்கள் பாஷையைச் சுத்தமான பாஷையாக (சுத்தமான உபதேசம், சத்திய உபதேசம்) மாறப்பண்ணுவார். (செப். 3 : 8, 9). அவர்கள் தங்கள் உபத்திரவத்தில் கர்த்தரை நோக்கி கதறும்போது, அவர் அவர்களைத் தங்கள் இக்கட்டுகளிலிருந்து விடுவிப்பார் என்பதை உணர்வார்கள். கடும் புயலை (உபத்திரவ காலம்) அமைதியாக்குகிறார், அதனிமித்தம் அங்குள்ள அலைகள் அமர்கின்றன. பின்பு, ஜனங்கள் மகிழ்ச்சியடைவார்கள், ஏனெனில் அவர்கள் அமைதியைப் பெற்றிருப்பார்கள்; அதன்பின்பு அவர்கள் நாடின துறைமுகத்திற்கு அவர்களை கொண்டு வந்து சேர்ப்பார். (ஆகாய் 2 : 7, "**எல்லா ஜாதிகளுக்கும் விரும்பமானது வரும்.**").


அப். 3 : 19–21–ன் மிகப்பெரிய வாக்குத்தத்தம் "**ஆனபடியினாலே கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும், முன்னே குறிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கும், உங்கள் பாவங்கள் நிவிர்த்தி செய்யப்படும் பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள். உலகத் தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிக ளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் இழந்துபோனதை திரும்பக் கொடுக்கும் காலங்கள்** ('times of Restitution" என்றே ஆங்கில வேதாகமத்தில் உள்ளது) **வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக் கொள்ள வேண்டும்.**" அதன்பின்பு வரும் காலத்தில் கிறிஸ்துவும் அவருடைய சபையும் தங்கள் ராஜ்யத்தை மனுஷர் மத்தியில் பூமியின்மீது ஸ்தாபிப்பார்கள். உலகத்தாரை மனமாற்ற மடையச் செய்யும், தற்கால முயற்சிகளின் வரையறைக் குட்பட்ட பலன்களுக்கு மாறாக அப்போது "**பூமியின் எல்லைகளெல்லாம் நினைவு கூர்ந்து கர்த்தரிடத்தில் திரும்பும்: ஜாதிகளுடைய சந்ததிகளெல்லாம் உமது சமூகத்தில் தொழுது கொள்ளும். ராஜ்யம் கர்த்தருடையது: அவர் ஜாதிகளை**

**ஆளுகிறவர்.**" (சங். 22 : 27, 28). ஏனெனில் அக்காலம் உலகத்தார் மனமாற்றமடைவதற்கு தேவனால் குறிக்கப் பட்ட காலமாயிருக்கும்.

தேவனுடைய ஜனங்களாக, நம்முடைய நாளில் வேதாகம தீர்க்கதரிசனத்தில் மிகுதியான அளவு நிறை வேறுவதை சாட்சியிடுகிறவர்களாகிய நாம் மெய்யாகவே நம்முடைய தலைகளை உயர்த்தி களிகூருகிறோம். ஏனெனில் நம்முடைய "மீட்பு சமீபமாயிருக்கிறது," ஏனெனில் "**தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று.**" (லூக். 21 : 28, 31). ஐக்கிய நாடுகளில் (மற்றநாடுகளிலும்கூட) கிறிஸ்தவர்கள் என்று எண்ணப்படுகிற கோடிக்கணக் கானவர்களிடமாக மீண்டும் திரும்பி, அவர்கள் எல் லோரும் அல்லது "கிறிஸ்துவுக்காகத் தீர்மானங்கள் எடுக்கிற" எல்லோரும்கூட மெய்யான கிறிஸ்தவர்கள் என்று நினைக்கலாமா? என்ற கேள்வி கேட்கப்படலாம். அதற்குரிய பதில் நிச்சயமாகஇல்லை! என்பதே. கர்த்தர் பவுல் அப்போஸ்தலன் மூலமாக அறிவித்தபடி, வெளிப் புறமாக யூதர்களாயிருப்பவர்கள் எல்லாரும் உண்மை யான யூதர்கள் அல்ல. "**ஆதலால் புறம்பாக யூதனானவன் யூதனல்ல, புறம்பாக மாம்சத்தில் செய்யப்படும் விருத்தசேதனமும் விருத்தசேதனமல்ல. உள்ளத்திலே யூதனானவனே யூதன்: எழுத்தின்படி உண்டாகாமல், ஆவியின்படி இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனமே விருத்தசேதனம்: இப்படிப் பட்டவனுக்குரிய புகழ்ச்சி மனுஷராலே அல்ல, தேவனாலே உண்டாயிருக்கிறது**" (ரோம. 2 : 28, 29), எனவே வெளிப்புற மாக கிறிஸ்தவர்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ள எல்லாரும் மெய்யான கிறிஸ்தவர்கள் அல்ல.

மத். 13 : 24-30, 36-43-ல், இயேசு நம்மிடம், அக்காலத்தில் அநேக "களைகள்" (போலி கிறிஸ்தவர்கள்) "கோதுமையின்" (மெய்யான கிறிஸ்தவர்களின்) மத்தியில் இருக்கும், இரண்டுமே யுகத்தின் முடிவான அறுப்பு வரைக்கும் ஒன்று சேர்ந்து வளரும் என்று கூறியுள்ளார். "**ஆதலால், அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்.**" (மத். 7 : 20). விசுவாசிகள் என்று தங்களை அறிக்கை செய்கிறவர்களின் கனிகளை உற்றுப் பார்ப்பதன் மூலமாக, பெயர்க் கிறிஸ்தவ சபையானது, பெரும்பாலும் "களைகளால்" நிறைந்திருக்கிறது என்று நாம் நிச்சயமாக கூறலாம்.

அநேகர் சமூக அந்தஸ்து, வியாபாரம் மற்றும் உத்தியோக சம்பந்தமான அனுகூலங்கள் மற்ற




> **"சாந்த குணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி சாந்த குணமுள்ளவர்களுக்குத் தமது வழியைப் போதிக்கிறார்."**
>
> **(சங். 25 : 9)**

வர்களுடைய புகழ்ச்சி, பொழுது போக்கு, நாகரீக பண்பு, வீண்பேச்சு போன்ற சுயநலமான காரணங்களுக்காக ஆலயத்துக்குப் போகிறார்கள்; தேவன் மற்றும் கிறிஸ்து வின் அன்பு அவர்களை நெருக்கி ஏவுகிறதினால் அல்ல. கிறிஸ்தவம் அவர்களுடைய ஜீவியங்களில் எந்த விதமான மெய்யான முத்திரையையும் பதிக்கவில்லை. அப்படிப்பட்டவர்களைக் குறித்து, கர்த்தர், "**இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து தங்கள் உதடு களினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள். அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது. மனுஷ ருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து: வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்**" (மத். 15 : 8, 9) என்று சொல்லுகிறார். அவர்கள் உணர்வின் ஆவிக்கு சிறிதளவே அக்கறை காட்டுகின்றனர்; சத்தியத்துக்கோ அதைக் காட்டிலும் குறைவாகவே அக்கறை காட்டுகின்றனர். ஆவியோடும் உண்மையோடும் தேவனைத் தொழுது கொள்ளும் வழிமுறை ஒன்று மட்டுமே அவருக்குப் பிரியமானது; ஆனால் அவர்களால் அவ்விதம் அவரைத் தொழுது கொள்ள இயலவில்லை. "**தேவன் ஆவியா யிருக்கிறார்** (ஆவி ஜீவியாக இருக்கிறார்) **அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும்.**" (யோவா. 4 : 24).

நாம் முக்கியமான மதத்தின் வளர்ச்சியை ஆராயும் போது, மதரீதியிலான எண்ணிக்கை வளர்ச்சி அங்கே காணப்பட்டாலும், ஒழுக்க நெறி முறையில் அதற்கொத்த வளர்ச்சி இல்லை என்ற முடிவுக்கு நாம் வர வேண்டியுள்ளது. சிலர் மதத்தை நவ நாகரீக பாணியில் (பகட்டழகாகக்) காண்பதுடன், மதத்தை, தங்களுடைய உத்தியோக பாதுகாப்பு, நல்ல ஆரோக்கியம் மற்றும் அனுதின கவலைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளுதல் போன்ற தனிப்பட்ட காரியங்களுக்குப் பயன்படுத்து கின்றனர். மற்றவர்களோ மரண நிலை, ஆத்துமா, நரகம் முதலியவை பற்றிய வேத வாக்கியங்களின் போதனை யைப் புரிந்து கொள்ளாமல், இந்த பாடங்களைக் குறித்த இருண்ட யுகங்களின் தவறான கருத்துக்களைத் தங்கள் மனங்களில் வைத்துக் கொண்டு ஏதாவது ஒரு சபையில் சேர்ந்து கொள்ளாமல், மரித்துவிட்டால், மரணத்திற்குப் பிறகு நித்தியமாக வதைக்கப்படுவோம் என்று பயப்படு கின்றனர். இந்த பயம்தான் உண்மையான கிறிஸ்தவர் களாக இல்லாத அநேகரை சபைகளுக்குள்ளாக இழுத்துக் கொண்டிருக்கிறது.

உண்மையான கிறிஸ்தவனை நாம் எப்படி அறிந்து கொள்வது? அவனுடைய நடையினாலும்,





அவனுடைய பேச்சினாலும், அவனுடைய குணப்பண்பினாலுமே உண்மையான கிறிஸ்தவனை கண்டறிய முடியும். இவையெல்லாம் வெளிப்படையாக அடையாளங்கண்டு கொள்ளும் முறைகளாயிருக்க, நம் உடன் மனிதரின் இருதய நிலைக்குள்ளாக நாம் நோக்கிப் பார்த்து, இந்த நபர் லூக். 14 : 27-ல் கொடுக்கப்பட்டுள்ளபடி ஒரு சீஷனா அல்லது கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவனா? என்று கேட்க வேண்டும். "**தன் சிலுவையைச் சுமந்து கொண்டு எனக்குப் பின் செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்.**" கிறிஸ்துவின் சீஷர்கள் அல்லது அவரைப் பின்பற்றுபவர்கள்தான் முதன்முதலில் அந்தியோகியாவில் கிறிஸ்தவர்கள் என்றழைக்கப்பட்டனர். "**பின்பு ........... அவனைக் கண்டு, அந்தியோகியாவுக்கு அழைத்துக் கொண்டு வந்தான். அவர்கள் ஒரு வருஷகாலமாய்ச் சபையோடே கூடியிருந்து, அநேக ஜனங்களுக்கு உபதேசம் பண்ணினார்கள். முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கலாயிற்று.**" (அப். 11 : 26). ஒருவன் சீஷனாக, கிறிஸ்துவைப் பின்பற்றுபவனாக, உண்மையான ஒரு கிறிஸ்தவனாக ஆக வேண்டுமென்றால் அவன் சில முக்கியமான நடவடிக்கைகளைச் செய்ய வேண்டியதிருக்கிறது.


**மனந்திரும்புதல் :** வேதாகமத்தின்படி, தேவன், ஆதாமை தமது சாயலின்படியே "மிகவும் நன்றாக" சிருஷ்டித்தார். (ஆதி. 1 : 26-31). ஆனால் ஆதாம் தேவனுக்கு கீழ்ப்படியாமல் பாவஞ்செய்தான், அதனால் அவன் மரணாக்கினைக்குத் தீர்ப்பளிக்கப்பட்டான்; அவனுடைய அரையிலிருந்த மனுக்குலத்தார் யாவரும் அவன் பாவஞ் செய்தபோது மரண ஆக்கினைத்தீர்ப்பில் பங்குள்ளவர்களானார்கள். "இப்படியாக ஒரே மனுஷனாலே பாவமும், பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும், எல்லா மனுஷரும் பாவஞ் செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்தது போலவும் இதுவுமாயிற்று." (ரோம. 5 : 12). பரம்பரை பரம்பரையாகவே மானத, சன்மார்க்க, சடத்துவ மற்றும் மதசம்பந்தமான ரீதியில் அபூரணமாயிருக்கிறார்கள். "**இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்: என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந் தரித்தாள்**" (சங். 51 : 5). எவன் ஒருவன் இயல்பாகவே தான் ஒரு பாவி என்பதை அறிவுப்பூர்வமாகப் புரிந்து கொண்டு, அதன்பின்பு தேவனுக்கேற்ற துக்கத்தை வெளிப்படுத்துகிறானோ, அப்பொழுதே அவன் மெய்யான ஒரு கிறிஸ்தவனாக மாறுவதற்கு முதல் அடியை எடுத்திருக்கிறான். (2 கொரி. 7 : 9-11).

**நீதிமானாக்கப்படுதல் :** "**தேவன் பாவிகளுக்கு செவி கொடுக்கிறதில்லை.**" (யோவா. 9 : 31); இயேசு, "**நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்: என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்:**" "**வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்: நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்**" (யோவா. 14 : 6; மத். 11 : 28) என்றார். அவர் இந்த சபை பிரிவுக்குப் போ அல்லது அந்த சபை பிரிவுக்குப் போ என்று சொல்லவில்லை, அனால் "**என்னிடத்தில் வாருங்கள்**" என்றே சொன்னார் என்பதை கவனியுங்கள். "**தேவன் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற** (பரிகாரமான) **கிருபாதார பலியாக தம்முடைய குமாரனைஅனுப்பினார்.**" (1 யோவா. 2 : 2; ரோம. 5 : 6-10).

இயேசு, "**எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக் கொடுத்தார்.**" (1 தீமோ. 2 : 6), அதனிமித்தம் ஆதாமும் அவனுடைய கீழ்ப்படியாமையினால் அவன் மீது வந்த மரண தண்டனையில் பங்குள்ளவர்களாகிய அனைவரும் தேவனுடைய தயவுக்குத் திரும்ப கொண்டு வரப்படும் சந்தர்ப்பத்தை அடைவார்கள். எவன் ஒருவன் உண்மையாகவே மனந்திரும்பி, தேவனுடைய கிருபையால் நீதிமானாகிய இயேசு கிறிஸ்து அவனுடைய பாவங்களுக்காக மரித்தார் என்று அறிவுப்பூர்வமாக நம்பி, தன்னுடைய பாவங்களுக்காக தேவனுக்கு முன்பாக நிவிர்த்தி செய்யும் கிருபாதார பலியாக இயேசுவின் மீட்கும் பொருள் பலியின் புண்ணியத்தில் விசுவாசம் வைக்கிறானோ, அவன் உண்மையான கிறிஸ்தவன் ஆவதற்கு நேராக இரண்டாவது அடியெடுத்து வைத்திருக்கிறான்.

சில பிரபலமான சுவிசேஷகர்கள் உட்பட, அநேகர் தவறுதலாக, இந்த இரண்டு படிகள் மட்டுமே (மனந்திரும்புதல் மற்றும் நீதிமானாக்கப்படுதல் மட்டுமே) ஒருவன் மெய்யான கிறிஸ்தவனாக மாறுவதற்கு அவசியமாயிருக்கின்றன என்று தவறுதலாக எண்ணி அவ்வாறே, போதித்தும் வருகின்றனர். விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டவர்கள் கிறிஸ்துவின் மூலம் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறார்கள் (ரோம. 5 : 1) என்பதை அறிந்து கொண்டதாக தெரியவில்லை. நாம் இந்தக் கிருபையில் (முன்னேறி) பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்று நிலை கொண்டிருந்து, தேவ மகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே






பிரதிஷ்டை : தேவனை தொழுது கொள்வதற்குரிய நோக்கங்களுக்காக பரிசுத்தமாக பிரித்தெடுக்கப்படுதல்

மேன்மைபாராட்டுகிறோம் என்று சுட்டிக்காட்டப்பட்டபடியே இன்னொரு படியும்கூட இருக்கிறது. பிரதிஷ்டை என்ற மூன்றாவது அடியை எடுத்து வைப்பவர்கள் மட்டுமே உண்மையான சீஷர்கள் அல்லது கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் – மெய்யான கிறிஸ்தவர்கள் ஆவர்.

பிரதிஷ்டை: இது தேவனுக்கு முழுமையானதொரு ஒப்புக் கொடுத்தலையும் (அர்ப்பணிப்பையும்), பரிசுத்தப்படுத்தல் அல்லது தேவனுக்கும், அவருடைய ஊழியத்துக்கும் ஒருவன் தன்னை பிரித்து ஒதுக்கி வைப்பதைக் குறித்துக் காட்டுகிறது; அதாவது ஒருவருடைய மனுஷீகத்துக்குரிய எல்லாவற்றையும் தேவனுக்கு ஒப்புவித்து, இயேசு செய்தபடியே தானும் தனது சுய சித்தத்திற்கு பதில் அவருடைய சித்தத்தை ஏற்றுக் கொள்ளுவதைக் குறித்துக் காட்டுகிறது. இதையே இயேசு "**அப்பொழுது நான் : தேவனே உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ வருகிறேன், (புஸ்தகச் சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது) என்று சொன்னேன்**" என்றார். (எபி.10 : 7). மேலும் தொடர்ந்து மத். 26 : 39-ல் "**சற்று அப்புறம் போய், முகங்குப்புற விழுந்து: என் பிதாவே, இந்த பாத்திரம் என்னை விட்டு நீங்கக் கூடுமானால் நீங்கும்படி செய்யும்: ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார்.**" பரி. பவுல் (ரோம. 12 : 1) "**அப்படியிருக்க, சகோதரரே,** (சகோதரரே என்று அழைக்கப் படுவதற்கு அவர்கள் ஏற்கனவே நீதிமான்களாக்கப்பட்ட விசுவாசிகளாயிருக்க வேண்டும்) **நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு** (அவருடைய கடந்த கால தயவுகள்) **உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்: இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை**" என்றார். மாற். 8 : 34-ல். இயேசு, "**ஒருவன் என் பின்னே வர விரும்பினால்** (என் சீஷனாவதற்கு) **அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்.**" மேலும் "**தகப்பனையாவது, தாயை யாவது, என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் ……….. மகனையாவது, மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல.**" (மத். 10 : 37; லூக். 14 : 26) என்றார். மெய்யான சீஷத்துவத்திற்கு சுயத்தை வெறுத்தலும், உலகை வெறுத்தலும் அவசிய மாயிருப்பதை அவர் எடுத்துக் காட்டினார். பிரதிஷ்டை செய்தவர்களின் சுயம் மற்றும் உலகம் சம்பந்தமான நியாயமான மனுஷீக உணர்வுகளுக்கு இடமளிப்பது தேவனுடைய காரியத்தின் நலன்களுக்கான அர்ப்பணிப்புக்கு இடையூறாக குறுக்கிடும்போதெல்லாம், அவர்களுடைய பங்கில் அவற்றைத் திருப்தி செய்யாமல் அவற்றை மறுப்பதை இது அர்த்தப்படுத்துகிறது.

நாம் மாற். 8 : 34-லிருந்து சற்று முன்பு கற்றுக் கொண்டபடியே, உண்மையான சீஷனாயிருக்க விரும்புகிறவன் சுய வெறுப்பு மற்றும் உலக வெறுப்பு ஆகிய இவற்றோடு கூடுதலாக, "**தன் சிலுவையை எடுத்துக் கொள்ள வேண்டியதும்**" அவசியமாயிருக்கிறது. சிலுவையை எடுத்துக் கொள்ளுதல் என்பது பரீட்சைகளையும், துன்பப்படுதலையும் பாடுகளை சகித்தலையும் ஏற்றுக் கொண்டு, தீர்மானத்துடன் போராடி வெற்றிபெற முயற்சி செய்வதை அர்த்தப்படுத்துகிறது. பரீட்சைகள்: "**பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து ஏதோ புதுமையென்று திகையாதிருங்கள்.**" (1 பேது. 4 : 12). துன்பப்படுதல்: "**அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்.**" (2 தீமோ. 3 : 12). பாடுகளை சகித்தல் : "**இதற்காக நீங்கள் அழைக்கப் பட்டுமிருக்கிறீர்கள்: ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப் போனார்**" (1 பேது. 2 : 21). பலியின் பாதையில் நாம் எஜமானரைப் பின்பற்றும் போது அல்லது நீதியினிமித்தமாக பாடநுபவிக்கும்போது நாம் மரணபரியந்தம் அப்படியே செய்கிறவர்களாயிருக்க வேண்டும்.

வேறொரு இடத்தில் (லூக். 14 : 27) இயேசு "**தன் சிலுவையைச் சுமந்து கொண்டு எனக்குப்பின் செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்க மாட்டான்**" என்று கூறுகிறார். சிலுவையை எடுத்துக் கொள்ளுதலும் அதனை சுமந்து செல்வதும் கடினமான காரியம் என்று அவர் எச்சரிக்கிறார். தற்காலத்திலுள்ள சுவிசேஷகர்களில் அநேகர் ஏதோ சிலவற்றைச் செய்யும்படி ஜனங்களைத் தூண்டி விடுகிறார்கள். பின்பு அவைகளை அவர்கள் முழுமையாக புரிந்து கொள்ளாமலும் அல்லது உணர்ந்து பாராட்டாமலும் இருக்கிறார்கள். அதற்கு மாறாக, இயேசு தன் சீஷர்களாக மாற விரும்புகிறவர்கள் முதலாவது உட்கார்ந்து அதற்கான செல்லுஞ் செலவை கணக்கு பார்க்கச் சொல்கிறார். (வச. 28). சில விஷயங்களில் நாம் முடிவு வரைச் செல்வதை உறுதி செய்கிற வரைக்கும் சிலுவையை எடுத்துக் கொள்ளாமலிருப்பது நல்லது. அவர் இதைக் குறித்து, "**கலப்பையின் மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப் பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல**" (லூக். 9 : 62) என்று எடுத்துரைக்கிறார். பிரதிஷ்டை செய்திருக்கிற தேவனுடைய பிள்ளை சிலுவையை எடுத்துக் கொள்ளும் போது, சிலுவையைத் தூக்கும் எளிய சிலாக்கியத்திற்காக




உங்கள் சுயத்தின் முடிவுக்கு நீங்கள் வரும்போது

தேவனுடைய துவக்கத்தை கண்டு கொள்வீர்கள்

அல்லாமல், அதனை பூரண திட நம்பிக்கையோடு மரணபரியந்தம் உண்மையுடன் சுமந்து செல்ல வேண்டும்.

ஆயினும் கொஞ்ச காலம் நாம் சிலுவையைச் சுமந்த பிறகு, நாம் அதன் பலனைக் காணவும், நாம் கொடுக்கிறதைக் காட்டிலும் எவ்வளவு அதிகமாக பெற்றுக் கொள்கிறோம் என்பதை எண்ணிப்பார்க்கவும் முடியும். சிலர் கிறிஸ்துவைப் பின்பற்றாமலிருப்பதால் ஏற்படும் பலனைப் பற்றி எண்ணிப் பார்க்க வேண்டிய சமயத்தில், அவரைப் பின்பற்றுவதால் ஏற்படும் விலைமதிப்பை எண்ணிப் பார்ப்பதில் அதிக காலத்தை செலவழிக்கிறார்கள் என்று சரியாகவே சொல்லப்பட்டிருக்கிறது. நாம் நம்முடைய அற்பமான மனுஷீக சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் கொடுக்கிறோம், ஆனால் தற்கால ஜீவியத்தில் உலகம் கொடுக்கவோ எடுத்துக்கொள்ளவோ முடியாத கிருபையின் ஐசுவரியங்களை – சமாதானம், சந்தோஷம், இருதயத்தில் ஆசீர்வாதத்தை, "நூறத் தனையாக" (மத். 19 : 29) பெற்றுக் கொள்கிறோம். **"இப் பொழுது இம்மையிலே, துன்பங்களோடே கூட நூறத்தனை யாக, வீடுகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தாய்களையும், பிள்ளைகளையும், நிலங்களையும் மறுமை யிலே நித்திய ஜீவனையும் அடைவான்"** (மாற். 10 : 30), மேலும் வரப்போகிற ஜீவியத்தில், தேவனுடைய பூமிக்குரிய ராஜ்யத்தில் நாம் நித்திய ஜீவனையும் பெறுகிறோம். மெய்யாகவே, செல்லும் செலவைக் குறித்து கணக்கு பார்த்த பிறகு, நாம் நம்முடைய அற்பமான பலியைக் குறித்து மிகவும் வெட்கப்பட்டு அதைக் கர்த்தரிடம் கொண்டு வர நாம் அஞ்சுகிற ஆபத்துமிருக்கிறது. கர்த் தருடைய வார்த்தையைப் பற்றிய அறிவின் மூலம் கிறிஸ்தவன் சிலுவையை எடுத்துக் கொள்ளத் தேவை யான தைரியத்தை அடைந்து கொள்கிறான், அத்துடன் அவருடைய அன்பான அழைப்பை ஞாபகபடுத்தும் இரக்கத்தையும், தயவையும் உணர்ந்து கொள்கிறான். **"வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்: நான் உங்களுக்கு இளைப் பாறுதல் தருவேன்."** (மத். 11 : 28).

கர்த்தரோடு செய்யும் உடன்படிக்கை தொடக்க மாயிருக்கிறது, ஒவ்வொரு உடன்படிக்கையாளருக்கும் ஏற்ற காலத்தில் தேவையான சகாயம் செய்யும் கிருபை கிடைக்கிறது. **"என்னாலேயல்லாமல் உங்களால் ஒன்றும் கூடாது"** என்று இயேசு சொல்கிறார். அவருடைய விஷயத்தில் நடந்தது போல, சிலுவையானது சுமப்பதற்கு மிகவும் பாரமாயிருக்குமானால், தேவன் நமக்கு ஒத்தாசை யையும், நமக்கான உதவியையும் ஏற்படுத்துவார். **"மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மை யுள்ளவராயிருக்கிறார்: உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக் கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்."** (1 கொரி. 10 : 13).

சில சமயங்களில், பரீட்சைகள், பாடுகள் மற்றும் துன்பங்கள் ஆகியவை சிலுவை சுமத்தலாக கருதப் படுகின்றன. உண்மையில் அவை சிலுவை சுமப்பதல்ல. மனுஷரில் அநேகர் "நான் திருமணம் செய்து கொண்ட திலிருந்து என் மனைவியே சிலுவையாயிருக்கிறாள்" என்று சொல்வார்கள். மனைவிமார்களிலும் அநேகர், அவர்களுடைய கணவரே சிலுவையாயிருப்பதாகச் சொல்வார்கள். இவைகளில் எதுவும் கிறிஸ்துவின் சிலுவை இல்லை என்பதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும். அதில் கஷ்டம் என்னவெனில் அந்த திருமணத்தில் தவறான நிதானிப்பை செய்ததுதான். ஆயினும், அப்படிப்பட்ட காரியமும் சிலுவை சுமத்தலாக மாறக் கூடும். உதாரணமாக கர்த்தரிடத்தில் விசுவாசமா யிருப்பதன் மூலம் கணவன் மனைவியிடையே ஏற்படும் எதிர்ப்பு பிரதிஷ்டை செய்த கிறிஸ்தவ வாழ்க்கைத் துணை யைப் பொறுத்த வகையில் இதைத் தாங்குவது சிலுவை சுமத்தலாக கருதப்படும். ஏனெனில் கிறிஸ்துவினிமித் தமாக, சத்தியத்தினிமித்தமாக இது சகிக்கப்படுவதால் சிலுவை சுமத்தலாகக் கருதப்படுகிறது. கிறிஸ்துவிடத்தில் நாம் உண்மையுள்ளவர்களாக இருப்பதன் காரணமாக வியாபார போட்டியாளர்களின் எதிர்ப்பை சகித்துக் கொள்வது சிலுவை சுமத்தலின் ஒரு பாகமாக கருதப்படும். அநேகமாக நாம் தேவனுக்கும், அவருடைய சித்தத்திற்கும் பிரதிஷ்டை செய்த சமயத்தில் சிலுவை சுமத்தலில் அடங்கியுள்ள எல்லாவற்றையும் நாம் பார்க்காதது நமக்கு நல்லதாயிருக்கிறது.

சிலுவையை எடுத்துக் கொண்ட பிறகு நாம் அதனை சுமந்து கொண்டு அவருக்குப் பின் செல்ல வேண்டும் என்று இயேசு நமக்குக் கூறுகிறார். நாம் அவரை முடிவுபரியந்தம் உண்மையுடன் பின்பற்ற வேண்டும். சிலுவை சுமத்தலானது நமக்கு வரும் சோதனைகளில் இருந்து ஓடிவிடுவதையோ அல்லது அவற்றைக் கண்டு பயந்து நடுங்குவதையோ அர்த்தப் படுத்தவில்லை. நாம் அவற்றை மகிழ்ச்சியுடன் சகிக்க வேண்டும். பிரதிஷ்டை செய்த தேவனுடைய பிள்ளை களுக்கு, சிலுவை சுமத்தலானது அனுதின விஷய மாகவும், குண வளர்ச்சியின் பாதையாயுமிருக்கிறது. நம்முடைய எஜமானரால் சொல்லப்பட்டது போல, **"என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது"** என்பதே நம்முடைய சிலுவை சுமத்தலின் மத்தியிலிருக்க வேண்டிய ஒரே சரியான உணர்வாயிருக்க வேண்டும்.

இயேசு, என்னைப் பின்பற்றி வாருங்கள் என்று சொல்லும்போது, இயேசுவின் பின்னால் நாம் எப்படி

வருகிறோம்? எவ்வாறு அவரைப் பின்பற்றுகிறோம்? அவரை நம்முடைய மாதிரியாகக் கொண்டு, "**உன் கால் நடையைச் சீர்தூக்கிப் பார்: உன் வழிகளெல்லாம் நிலைவரப் பட்டிருப்பதாக**" என்பதை நாம் கைக்கொள்கிறோம். (நீதி. 4 : 26). அப்படியே இயேசுவைப் போலவே அவருடைய மாதிரியை நாம் பின்பற்றி நடக்கிறோம்! அத்துடன், தொடர்ந்து சுய வெறுப்பையும், உலகவெறுப்பையும் காட்டுவதோடு கூட, நாம் இதனைப் பற்றி தொடர்ந்து தியானிப்பதின் மூலமாக, மனப் பூர்வமாக கீழ்ப்படிந்து, தேவனுடைய நல் வார்த்தைக்கு சாட்சி பகர்ந்து சுய பரிசோதனை மற்றும் விழிப்பாயிருத்தல் மூலமாகவும் ஜெபத்தின் மூலமாகவும் இதைத் தொடர்ந்து செய்கிறோம். "**துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும், கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.**" (சங். 1 : 1, 2). மருத்துவரான லூக்கா, நம்முடைய எச்சரிப்புக்காக இந்த வார்த்தைகளை எழுதும்படி பரிசுத்தாவியால் வழிநடத்தப் பட்டார். "**நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும், நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன் கொடுக்கிறவர்களாயிருக் கிறார்கள்.**" (லூக். 8 : 15). கொலோ. 4 : 2-ல் "**இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள்**" என்று நமக்கு உற்சாக மூட்டப்படுகிறபடி, நம்முடைய ஜெப ஜீவியத்தில் நம்முடைய கர்த்தரைப் போலவே நடந்து கொள்வோமாக.

இந்தக் கருத்துக்களை நாம் ஆழ்ந்து சிந்தித்துப் பார்ப்போமாக. இயேசுவை நம்முடைய இரட்சகராக தைரியத்துடன் ஏற்றுக் கொள்வதில் ஆரம்பித்து, சீஷத்துவத்தைப் பற்றி பயமின்றி அறிக்கை செய்து, அவரைப் பின்பற்ற வேண்டும் என்ற தைரியமிக்க உள் எண்ணம் மட்டும் நமக்குப் போதுமா? கர்த்தருடைய பட்சத்தில் நிற்க வேண்டும் என்ற நம்முடைய உறுதியான தீர்மானத்தை எடுத்து அவருடைய சீஷர்களாகி விட்ட பிறகு, நாம் அதை

**1 பேதுரு 3 : 13—4 : 6**

**(3 : 13) முடிவு செய்ய அழைப்பு**
கட்டளைகளைக் கைக்கொள்ளுகிற குடிமக்களை சமூகங்கள் மதிக்கின்றன.

**(3 : 14) கட்டளை :** எந்த தீமைக்கும் பயப்படாதே
* பாடுகளில் சந்தோஷமாயிரு
* நிந்திக்கப்படுதல் ஒரு ஆசீர்வாதம்

**(3 : 15, 16) போதனைகள் :**
* உங்கள் இருதயங்களில் கர்த்தரைப் பரிசுத்தப்படுத்துங்கள்
* நல் மனசாட்சியை உருவாக்குகிறது.

**(3 : 17) கட்டளை :** தேவனுக்குப் பயந்திரு
* பாடுகளில் பரிசுத்தமாயிரு
* பாடநுபவித்தல் ஒரு ஆசீர்வாதம்

**(3 : 18–4 : 6) போதனைகள் :**
* கிறிஸ்துவின் சிந்தையை ஆயுதமாக தரித்துக் கொள்ளுங்கள்
* நல்ல நடத்தையை உருவாக்குகிறது.

**விசுவாசம்** என்பது **தேவனால் கூடும்** என்று நம்பியிருப்பதல்ல, **தேவன் செய்வார்** என்று அறிந்திருப்பதே.

நிரூபிக்கிறவர்களாக இருக்க வேண்டும். யேகோவாவினால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற இந்த சிலாக்கியங்கள் தொடக்கத்தில் மட்டும் மிகுந்த ஆர்வமுடையவர்களாய், சந்தோஷத்தில் குதித்து "அல்லேலூயா, நான் இரட்சிக்கப் பட்டுவிட்டேன்!" என்று சத்தமிடுபவர்களுக்கு அல்ல, ஆனால் யாரெல்லாம் நாளுக்குநாள் எஜமானருடைய அடிச்சுவடுகளில் அவரைப் பின்பற்றி நடந்து, தங்கள் தகுதியை தங்கள் விசுவாசத்தினாலும், பொறுமையோடு கூடிய சகிப்புத் தன்மையினாலும் நிரூபிக்கிறார்களோ அவர்கள் இறுதியில் கர்த்தரால் பாத்திரவான்களாக அங்கீகரிக்கப்படுவார்கள். "**நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது.**" (எபி. 10 : 36), அத்துடன் அவருடைய "**நன்றாகச் செய்தாய், உண்மையும், உத்தமுமான ஊழியக்காரனே**" என்று அவர் சொல்வதைக் கேட்பீர்கள்.

விசுவாசம் கிரியை செய்ய வேண்டும்; அது பயன் விளைவிக்க வேண்டும்; அது காணத்தக்கதாக இருக்க வேண்டும்; அது செயலைத் தூண்டி விட வேண்டும்! வருகிறதும், போகிறதுமான சோதனைகளை விசுவாசம் சகிக்கிறது, ஆனால் ஒரு வலுவான விசுவாசம் அவற்றை நேருக்கு நேர் சந்தித்து, சகித்துக் கொள்ளுதலை வளர்க்கிறது. விசுவாசமானது சோதனைகளை புரிந்து கொள்கிறது! விசுவாசம் வசனத்திற்கு கீழ்ப்படிகிறது, விசுவாசம் தப்பான எண்ணங்களுக்கு இடங்கொடாது. விசுவாசம் கிரியைகளில் தன்னை வெளிப்படுத்துகிறது. விசுவாசம் நாவைக்கட்டுப்படுத்துகிறது. விசுவாசம் விவேகத்துடன் செயல்பட்டு, நாம் பரத்துக்குரிய ஞானத்தை, தேர்ந்தெடுக்கவும், பூமிக்குரிய ஞானத்தை ஒதுக்கித் தள்ளவும் கூடிய திறமையைக் கொடுக்கிறது. விசுவாசம் உலகத்திலிருந்து பிரிந்து, தேவனுக்கு கீழ்ப்படிதலை உருவாக்குகிறது. நாம் பிசாசை எதிர்த்து நிற்கவும், தேவனிடம் மனத்தாழ்மையுடன் கிட்டி சேரவும், தேவையான ஆற்றலை நமக்குக் கொடுக்கிறது. இறுதியாக, விசுவாசம் கர்த்தருடைய வழிநடத்துதலுக்காக பொறுமையாகக் காத்திருக்கிறது. அதோடுகூட முறுமுறுத்து குறை சொல்லித் திரிவதையும் அடக்கி வைக்கிறது. "**நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும், நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக் கடவது.**" (யாக். 1 : 4).


மெய்யான கிறிஸ்தவர்களாக, நாம் எப்பொழுதும் மனதில் கொண்டிருக்க வேண்டியது: "**கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடு**

**களைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப் போனார்.**" (1 பேது. 2 : 21). அவருடைய வழி நடத்துதலை நாம் கவனத்துடன் பின்பற்றினால், நம்முடைய மேய்ப்பராக அவருடைய நிலையான பராம ரிப்பை உணர்ந்து கொள்வது எத்தகைய ஆறுதலளிக்கிறது! கிறிஸ்தவன் தன்னுடைய எந்த அனுபவத்தையும், அதிர்ஷ்டத்தினாலோ அல்லது துரதிர்ஷ்டத்தினாலோ ஏற்படுவதாக ஒருபோதும் கருதக் கூடாது, அவன் கர்த்த ருடன் நெருங்கி ஜீவித்துவருபவனானால், அவனைக் குறித்த எல்லா காரியங்களுமே அவரால் ஒழுங்குபடுத்தப் பட்டும், வழிநடத்தப்பட்டும் வருகின்றன என்பதை அவன் நினைவிற் கொள்ள வேண்டும். "**நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும். அவனுடைய வழியின்மேல் அவர் பிரியமாயிருக்கிறார்.**" (சங். 37 : 23). அந்த வழி எவ்வளவுதான் முட்களால் ஆனதும், நெருக்கமானதும், கற்கள் நிறைந்ததுமாயிருந்தாலும், தேவனுடைய வழியே சிறந்தது என்று அவன் அறிந்திருக்கிறான்.

ஆனால் சிலர், நம்முடைய பரமபிதாவானவர் ஒவ்வொரு சிறிய அடியையும், அற்பமான ஒவ்வொரு நிகழ்வையும் நம்முடைய அனுபவங்களில் திட்டமிட்டு, ஒழுங்குப்படுத்துகிறாரா? என்று கேட்கலாம். இல்லை. இது அநேகமாக ஒரு மித மிஞ்சிய எண்ணமாக இருக்கக் கூடும். ஆயினும், "**கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச்** (பயபக்தியுடனிருப்பவர்களை) **சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்**" (சங். 34 : 7) என்று நமக்கு நிச்சயமளிக்கப்பட்டிருக்கிறது. எனவே நாம் நம்முடைய எல்லா காரியங்களிலும் அதிகமதிகமாக கர்த்தருடைய பரிபாலனத்தை பார்க்கும்படி முயற்சிப் போமாக. நம்முடைய அடிகள் யாவும் அவரால் ஒழுங்கு படுத்தப்படுகின்றன என்பதை அறிந்தவர்களாக நாம் அவருடன் மனத்தாழ்மையுடனும், அன்புடனும் நடந்து கொள்வோமாக. அதற்காக நாம் செய்கிற எல்லா வற்றையும் அல்ல, நாம் எடுக்கிற ஒவ்வொரு அடியும் அது தவறான அடி என்று நிரூபிக்க கூடியதாக இருந்தாலும் கூட அது அவரால் கட்டளையிடப்பட வேண்டியது அவசியமல்ல என்றும் அறிந்து கொள்ள வேண்டும். ஆனால் நீதிமானுடைய பொதுவான வாழ்வின் போக்கு அவருடைய மேற்பார்வையின் கீழ் இருக்கிறது. தேவன் தம்முடைய (தேவ) தூதர்களுக்கும் (Angels), தம்முடைய (ஊழியக்காரரான) தூதுவர்களுக்கும் (Messengers) தம்முடைய ஜனங்கள்மீது பொறுப்பைக் கொடுக்கிறார். "**உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார். உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னைத் தங்கள் கைகளில் ஏந்திக் கொண்டு போவார்கள்.**" (சங். 91 : 11, 12) உண்மையான கிறிஸ்தவர்கள் – பிரதிஷ்டை செய்த கிறிஸ் தவர்கள் யேகோவாவினால் வழிநடத்தப்படுகிறார்கள்.

ஆகையால், மெய்யான கிறிஸ்தவன் ஒருவன் சில குறிப்பிட்ட கண்டிப்பான தேவைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதை நாம் வேத வாக்கியங்களிலிருந்து பார்க்கிறோம். அநேக இலட்சக்கணக்கான ஜனங்கள் சபைகளில் சேர்ந்து கொண்டு பிரபலமான கருத்துக் களின்படி கிறிஸ்தவர்களாக கடந்து செல்கின்றனர், ஆனால் அவர்கள் வெளித்தோற்றத்தில் மட்டுமே கிறிஸ்த வர்கள் அதுபோலவே அநேகம் பேர் வெளித் தோற்றத்தில் யூதர்களாக இருந்தனர். தங்களை மெய்யான கிறிஸ்த வர்கள் என்று எண்ணிக் கொண்டு "கிறிஸ்துவுக்காக தீர்மானங்கள்" எடுத்தவர்கள் மத்தியிலும்கூட அநேகர் அப்படி இருப்பதில்லை, ஏனெனில் அவர்கள் தங்கள் ஜீவியங்களை ஒருபோதும் தேவனுக்கென்று பிரதிஷ்டை செய்யவில்லை. சுயத்தை வெறுப்பவர்கள், உலகத்தை வெறுப்பவர்கள், சிலுவை சுமக்கும் சீஷர்கள் அல்லது கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாகிய உண்மையான கிறிஸ்தவர்கள், "உண்மையான சீஷர்கள்" (யோவா. 8 : 31) ஒப்பிட்டுப் பார்க்கையில் கொஞ்சம் பேரே இருக்கின்றனர். அவருடைய வசனத்தில் தொடர்ந்து நிலைத்திருந்து தங்களுடைய இருதயங்களில் அதன் பரிசுத்தமாக்கும் வல்லமை கிரியை செய்ய இடமளிக் கிறவர்களுக்கு மட்டுமே இயேசு, சத்திய அறிவையும், அது கொண்டு வருகிற ஆசீர்வாதமான விடுதலையையும் வாக்களிக்கிறார். யோவா. 17 : 17 ஆம் வசனம் "**உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்: உம்முடைய வசனமே சத்தியம்**" என்று கூறுகிறது. "**சத்தியத் தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்.**" (யோவா. 8 : 32).

நாம் சுவிசேஷ யுக அறுவடை காலத்தின் விரிவடைந்துள்ள பகுதியில் ஜீவித்துக் கெண்டிருக்கிறோம். வேதாகம பிரபுக்கள் அல்லது தளபதிகள் குவாசி எலக்ட் வகுப்பரை – அவர்கள் மத்தியிலுள்ள பிரதிஷ்டை செய்த எபிபனி பாளயக்காரர்களைக் குறித்துக் காட்டுகின்றனர். இந்த பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளையக்காரர்கள் தங்களுடைய பலதரப்பட்ட திறமைகளால் தெரிந்து கொள்ளப்படாத வகுப்பாரை பரிசுத்த பெரும்பாதையில் முன்னேறிச் செல்ல உதவி செய்வதில் ஒத்தாசையாக இருப்பார்கள். அதனால் அவர்கள் எவ்விடத்திலும் போய் ஜனங்களை தேவனுடைய வார்த்தையண்டைக்கும், ஊழியத்துக்கும் வரும்படி மனமாற்றமடையச் செய்வார் கள். இந்த ஊழியக்காரர்கள், ஜனங்களுக்கு சமாதானம் கொண்டு வருவதில் உதவியாக இருப்பார்கள். இது




"நாம் ஜெபிக்கும் போது
நாம் சொல்வதைக் காட்டிலும்
அதிகமாக தேவன் கேட்கிறார்,
நாம் கேட்பதைக் காட்டிலும்
மிகுதியாக அவர் பதிலளிக்கிறார்,
நான் கற்பனை செய்வதை விட
அதிகமாக அவர் கொடுக்கிறார்,
ஆனால் ....
தமக்குரிய சமயத்திலே,
தமக்குரிய வழியிலே!
ஆதலால் விசுவாசத்தில் நிலைத்திரு!!"

பயபக்தியுடன் விரும்பக்கூடிய முடிவாயிருக்கிறது! மனந் திரும்புதல் மற்றும் நீதிமானாக்கப்படுதலின் அடிகளை எடுத்து வைத்தவர்கள். விசேஷமாக, அமர்ந்திருந்து பிரதிஷ்டையின் விலைமதிப்பை (செலலும் செலவைக்) கணக்கிடவும், அப்படிச்செய்த பிறகு, மெய்யான கிறிஸ்த வர்களாக "**மெய்யான சீஷர்களாக**" ஆகும்படி தீர்மானம் எடுக்க உற்சாகப்படுத்துகிறோம்.

புதிதாக பிரதிஷ்டை செய்தவர்களுக்கும் அதைப் போலவே புதிதாக நீதிமானாக்கப்பட்டவர்களுக்கும் தேவனுடைய வார்த்தையிலுள்ள உபதேசம், அவற்றில் கொடுக்கப்பட்டுள்ள நம்பிக்கைகள் மற்றும் வாக்குத்தத் தங்கள் தேவைப்படுகின்றன. எனவே நாங்கள் தேவனு டைய ஜனங்களெல்லாரையும், கிறிஸ்துவின் கோட் பாட்டை (உபதேசத்தை), அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் கோட்பாட்டை, வேதாகமத்தின் தூய் மையும் எளிமையான உபதேசத்தை உபதேசிக்கும் ஊழியஞ் செய்ய நாடும்படி உற்சாகப்படுத்துகிறோம். நாம் எந்த அளவுக்கு கலப்படமில்லாமல் இந்த உபதே சத்தை அவர்களுக்கு கொடுத்து, நாம் "இரட்சிப்புக் கேதுவான தேவனுடைய வல்லமையை" அவர்களுக்கு தெரிவிக்கிறோமோ, அந்த அளவுக்கு அது அவர்களை விழுந்து போவதிலிருந்து காப்பாற்ற முடியும்.

வேதாகமத்தின் கோட்பாட்டை (உபதேசத்தை) புதிதாக பிரதிஷ்டை செய்திருக்கிற இருதயங்கள் மற்றும் மனங்களுக்குள்ளாக செலுத்தும் அளவுக்குத்தக்கதாக, பூமிக்குரிய வாஞ்சைகள் மற்றும் இன்பங்களாகிய முட்கள் மற்றும் முட்செடிகளின் விதைகளை சாகும்படி அழிக்கத்



பிரிந்து விழுகிற வேதாகமம் வழக்கமாக அப்படி வீழாத ஒருவருக்கு சொந்தமானதாயிருக்கும்

– சார்லஸ் ஸ்பர்ஜன்

தேவையான களைக்கொல்லியை அவர்களுக்குக் கொடுப் பதில் நாம் வெற்றி காண்போம். ஏனெனில், இப்படிப்பட்ட வாஞ்சைகள் அழிந்தால் தான், ராஜ்யத்தின் நல்ல விதைகள் செழித்து வளரவும் ராஜ்யத்தின் காரியங்களில் முழு இருதயத்துடன் ஈடுபடவும் முடியும். தெய்வீக வார்த்தையின் அதிசயமான சத்தியங்களுக்கு யாருடைய அறிவின் கண்கள் திறக்கப்படுகிறதோ, அவர்கள் மட்டுமே, "**கிறிஸ்துவின் அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்து கொள்ள**" (எபே. 3 : 19) சரியான உணர்வைப் பெற்றிருக்க முடியும். மேலும் அப்படிப்பட்டவர்கள் மட்டுமே, "**தேவன் தம்மில் அன்பு கூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை**" (1 கொரி. 2 : 9) என்பதை உணர்ந்து பாராட்ட முடியும். இவர்கள் தங்கள் வீடுகள் அல்லது நிலங்கள் அல்லது பெற்றோர் அல்லது பிள்ளைகள் அல்லது வேறெதையும் நேசிப்பதைக் காட்டிலும் அதிகமாக, – தங்களையே நேசிப்பதைக் காட்டி லும் அதிகமாக – தேவனை நேசிக்கிறார்கள். அதனால் அவருடைய ஊழியத்தில் அவர்கள் தங்களுடைய ஜீவனைக் கொடுக்க சித்தமுள்ளவர்களாயிருக்கிறார்கள். (1 யோவா. 3 : 16).

***

# யோசியா – தெய்வபக்தியுள்ள ஒரு இளம்வயது ராஜா

2 நாளா. 34 : 1–13

*(Josiah - A Godly Young King)*

"***உன் வாலிபப் பிரயாத்திலே உன் சிருஷ்டிகரை நினை***" (பிர. 12 : 1).

BS#884

ஞானமுள்ள யோசியா

மனுஷனுடைய வாய்மொழிகள் ஆழமான ஜலம் போலிருக்கும். ஞானத்தின் ஊற்று பாய்கிற ஆற்றைப் போலிருக்கும்.

நீதி. 18 : 4.

நாங்கள் எங்களுடைய பாடத்தை, யூதாவின் ராஜாவாகிய எசேக்கியா ராஜாவின் மகனும், வாரிசும் யோசியாவின் தாத்தாவாகிய மனாசே ராஜாவின் சரித்திர குறிப்புகளிலிருந்து தொடங்குகிறோம். இந்த மனாசே தன்னுடைய தகப்பனுடைய மரணத்திற்குப்பின், பன்னிரண்டாம் வயதில் ராஜாவானான். அந்த சமயத்தில் (716 கி.மு.) அங்கே சீர்திருத்தத்தை எதிர்க்கும் குழுக்களும் இருந்தன. அவர்கள் எசேக்கியாவால் ஆரம்பிக்கப்பட்ட ஆராதனை முறை மற்றும் ஒழுக்க நெறி முறைகளில் சீர்திருத்தங்கள் செய்வதை நிறுத்தும்படியாக அந்த சிறு பையனாகிய ராஜாவைப் பயன்படுத்திக் கொண்டார்கள். தன் சொந்த குமாரனை தீ மிதிக்கப் பண்ணியது உட்பட மனிதர்களை பலியிட்டு மனாசே அந்நிய வழிபாட்டு முறைகளுக்கு இடங்கொடுப்பதிலும், அவற்றைப் பின்பற்று பவர்களை மகிழ்விப்பதிலும் தன்னையே மிஞ்சிவிட்டான்; (2 ராஜா. 21 : 6). மனாசேயின் ஆட்சிக்

காலத்தின் (55 வருடங்கள்) பெரும் பகுதியும் கொடுமையும் மூட நம்பிக்கைகளும் செழித்தோங்க அனுமதிக்கப்பட்டதே எருசலேமின் வீழ்ச்சிக்கு காரணமாயிருந்ததாக தீர்க்கதரிசி கூறியிருக்கிறார். வயதான காலத்தில் அவர் தன்னுடைய கீழ்ப்படியாமையை உணர்ந்து கொண்டார், அதனால் தம்முடைய வழிகளை சரிப்படுத்திக் கொள்ளவும், எருசலேமுக்குத் திரும்ப வரவும் தேவனால் அனுமதிக்கப்பட்டார்.

மனாசே ராஜாவுக்கு ஆமோன் என்னும் துன்மார்க்கமான மகன் ஒருவன் இருந்தான். அவன் தன்னுடைய தகப்பனாகிய மனாசேயின் சீர்கேடும், சுகபோகமும் அநியாயம் நிறைந்ததுமான பாழான ஆட்சியைத் திரும்பவும் கொண்டு வந்தான்; ஆனால் இரண்டு ஆண்டு காலமே அரசாண்டான். ஆமோன் ராஜா தன்னுடைய அரண்மனையிலேயே தன்னுடைய ஊழியக்காரர்களால் கொல்லப்பட்டான். (2 நாளா. 33 : 20-24). பாடத்தின் முக்கியமான நபராகிய, ஆமோனின் குமாரன் யோசியா, தன்னுடைய எட்டாவது வயதில் யூதா ராஜ்யத்தின் பதினோராவது ராஜாவானான். பதினாறு வயதாகும் போது, அவனுடைய இருதயம் சர்வ வல்லமையுள்ள தேவனைத் தேடவும், அவரைச் சேவிக்கவும் வாஞ்சிக்கத் தொடங்கிவிட்டது. அவன் இருபது வயதை அடைந்த போது, அவனுடைய மதசம்பந்தமான நம்பிக்கைகள் மிகவும் ஆழமாகவும், உறுதியாகவும் இருந்ததுடன், அரசனுடைய அதிகாரம் அவன் கையிலேயே இருந்ததால், அவன் சீர்திருத்த வேலைகளை துணிவுடன் செய்யத் தொடங்கினான். விக்கிரகங்கள், அவற்றின் கோவில்கள், விக்கிரக வணக்கத் தோப்புகள் யாவும் தகர்க்கப்பட்டன. இன்னோம் பள்ளத்தாக்கு பரிசுத்த குலைச்சலாக்கப்பட்டு எருசலேமின் கழிவுப் பொருட்களை ஒதுக்கிப் போட்டுவைக்கிற ஒரு ஸ்தலமாக ஆக்கப்பட்டது.


கர்த்தருடைய ஆலயம் பழுதுபார்க்கப்பட்டு, தொழுது கொள்வதிலும், துதிப்பதலுமிருந்த எல்லா விக்கிரக கறைகளும் சுத்திகரிக்கப்பட்டு, சர்வ வல்லமையுள்ள தேவனுக்குரிய தாயிற்று. இதற்கும் மேலாக ராஜா தனது ராஜ்யத்தின் இரண்டு கோத்திரங்களான யூதா மற்றும் பென்யமீனின் பிரதேசங்களாக முற்காலத்திலிருந்த பகுதிகளிலும் விக்கிரகத் தோப்புகளை அழிக்கும் ஆதிக்கத்தை விரிவுப்படுத்தினான்.

"**உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை!**" என்ற நம்முடைய பாடத்தின் தலைப்பு வசனத்தில் எப்பேற்பட்ட உதாரணம் இருக்கிறது! சில பெற்றோர் தங்கள் பிள்ளைகள் நீதியை அறிந்து உணர்ந்து அதன் ஊழியக்காரர்களாக ஆயத்தமாவதற்கு முன்பே "**இளமைப் பருவத்திற்குரிய களியாட்டுகளில்**" அனுபவத்தைப் பெற்றிருக்க வேண்டும் என்று கருதுவதில் அவர்கள் எப்படிப்பட்ட தவறைச் செய்கிறார்கள்! இந்த எண்ணம் ஆண், பெண் இரண்டு பேருக்குமே வாலிப வயதின் மனங்களில், பிரதிபலிக்கப்படுகிறது; அவர்களுடைய பெற்றோர் அல்லது பாதுகாவலர்களால் தங்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுவதைக் காட்டிலும் உயர்ந்த நிலையில் ஜீவிக்க அவர்கள் அபூர்வமாகவே நாடுகிறார்கள். சாலொமோனின் இந்த புத்தகம், சாலொமோனின் பிந்தின காலத்தில் அவரது இருதயம் அதிகமான புலன்களைப் பாதிக்கும் இன்பங்களினால் நோய்வாய்பட்டு, மெய்யான சந்தோஷம் இழந்திருந்தபோது எழுதப்பட்டதாகத் தோன்றுகிறது. இந்த சமயத்தில்தான் அவர் தன்னுடைய ஐசுவரியங்களையெல்லாம் விட்டுவிட்டு திரும்பி "**மாயையிலும் மாயை, எல்லாம் மாயை**" (பிர. 1 : 2) என்ற துயரம் நிறைந்த கூற்றைக் கூறினார். தன்னுடைய சொந்த அனுபவத்திலிருந்து நம்முடைய பாடத்தின் சத்தியத்தை அவர் நிரூபிப்பதுடன், தன்னைப்போல் அல்லாமல் வேறு வித்தியாசமான (சரியான) போக்கை கடைப்பிடிக்கும்படி மற்றவர்களுக்கு ஆலோசனை கூறுகிறார்! "**தேவனுக்குப் பயந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்: எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே.**" (பிர. 12 : 13).

சில பரிசுத்தமான தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளுக்கு தாங்களே நடந்து செல்லக்கூடாத உலகத்தின் வழிகளை அவர்களுக்கு அறிமுகப்படுத்தி அஜாக்கிரதையால் அவர்களுக்கு கண்ணிகளை ஏற்படுத்தி வைப்பதை நாம் அறிந்திருக்கிறோம். அவர்கள் சில சமயங்களில் கடந்த கால தவறை பார்த்து, அவனுடைய இளமைக்குரிய களியாட்டில் அனுபவம் பெறுகிறான் என்பதாக சொல்கிறார்கள்! தற்காலத்தில், இந்த உலகத்தில் மெய்யான சந்தோஷம் "**நெருக்கமான வழியைத்**" தவிர வேறு எதிலும் இல்லை என்பதை (மத். 7 : 13, 14) உணர்ந்து கொள்ள அவர்கள் தவறிவிட்டனர். சுயதிருப்தி, பெருமை, இச்சை, பாவம், சுயநலம் நிறைந்த "**விசாலமான பாதை**" தூரத்திலிருந்து பார்ப்பதற்கு அழகானதொரு காட்சியாகத் தோன்றுகிறது; ஆனால் அந்த காட்சி ஒரு கானல் நீர். அது ஒருபோதும் அடைய முடியாதது. அது ஒரு மாயத்தோற்றம். இலட்சக்கணக்கான மக்கள் சுயநலம், பெருமை நிறைந்த விசாலமான பாதையில் சந்தோஷத்தைத் தேடி தங்கள் முழு பெலத்தோடே ஓடுகிறார்கள்; ஆனால் அந்த லட்சக்கணக்கானோரில் எத்தனைபேர் அந்த பாதையில் மெய்யாகவே நிலைத்திருக்கும் சந்தோஷத்தை கண்டுபிடித்திருக்கிறார்கள்? எங்களைப் பொறுத்தவரை அவர்கள் சந்தோஷத்தை தேடுகிறவர்கள் மட்டுமே, சந்தோஷத்தை கண்டடை பவர்கள் அல்ல; உலகத்திலுள்ள ஒரே மெய்யான சந்தோஷம் மற்றும் உண்மையான மகிழ்ச்சி என்பது சுயத்தை தியாகம் செய்யும் "நெருக்கமான வழியில்" மாபெரும் போதகருடைய அடிச்சுவடுகளில் அவரைப் பின்பற்ற சிலுவையை எடுத்துக் கொள்வதில் அவர் தம்முடைய ஜீவனை விட்டதுபோல, ஜீவனை கொடுப்பதில் தான் கண்டடையப்படக் கூடியதாயிருக்கிறது.

விசாலமான பாதையில் பிரவேசித்தவர்களில் சிலர் நெருக்க வழிக்கு எப்போதாவது திரும்பி வருகின்றனர். பெற்றோர், நண்பர்கள், கிறிஸ்தவர்கள் போன்றவர்கள் அவர்களுக்கு அந்த விசாலமான பாதையே சந்தோஷமும், மகிழ்ச்சியும் நிறைந்த ஒன்று என்ற தவறான எண்ணத்தைக் கொடுத்திருக்கின்றனர். அதில் அவர்கள் மீண்டும் மீண்டும் தோல்வியையே காணும்போது, இயல்பாகவே அவர்கள் நெருக்க வழிப்பாதையும் விரும்பத்தக்கதல்ல என்ற முடிவுக்கு வந்து விடுகின்றனர். விசாலமான பாதையில் நடந்து வந்த பின்பு மீண்டும் நெருக்க வழியைக் கண்டுபிடிக்கிற அவர்களில் சிலர் "ஆ, ஏன் நான் ஒரு வாலிபனாக இருந்தபோது, கர்த்தருடைய சத்தியம், சந்தோஷம், சமாதானம் மற்றும் சந்தோஷத்திற்கு வழிநடத்துகிற அவரது வழியைக் கண்டடையாமற் போனேன்!" என்று தங்கள் கருத்தைக் கூறுகிறார்கள்.

> பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே
> அவனை நடத்து; அவன் முதிர் வயதிலும்
> அதை விடாதிருப்பான்.நீதி. 22 : 6




எல்லாரும் விழுந்துபோன கேடான நிலையில் பிறந்திருந்தாலும், ஒவ்வொரு பிள்ளையின் மனதிலும் குறிப்பிடத்தக்க எளிமையும், உண்மையும் காணப்படுகிறது. இந்த கோட்பாடு பொதுவாக ஆசிரியர்களாலும், உதவி புரிபவர்களாலும் பயன்படுத்தப்பட வேண்டும், அந்த பிள்ளை சரியான பாதையில் வழிநடத்தப்படுமானால், அதன் மூலம், அவன் தன்னுடைய சிருஷ்டிகருடன் ஒரு தொடர்பையும் இசைவிணக்கத்தையும் வெகு சீக்கிரத்தில் அடைந்து கொள்வான், "**பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்.**" (நீதி. 22 : 6). உண்மையில், சில சமயங்களில், தேவனுடைய பராமரிப்பின் கீழ், பரத்திலிருந்து கிடைக்கிற செய்தி இருதயத்தை அடைந்து, சிறிய எதிர்ப்புடன் அதனை இழுத்துக் கொள்கிறது. ஜீவியத்தின் வெறுமை புரிந்து கொள்ளப் படுகிறது, பரத்திலிருந்து வருகிற ஞானத்தின் அவசியம் உணரப்படுகிறது. அநேகமாக ஒருவேளை பெற்றோருடைய போதனை மூலமாகவோ, ஒருவேளை ஒரு நண்பருடைய ஆலோசனைகள் மூலமாகவோ, ஒருவேளை ஒரு கைப்பிரதி அல்லது ஒரு புத்தகத்தின் மூலமாகவோ, அந்த இளம் இருதயத்துக்கு ஞானத்தின் வழியானது காட்டப்பட்டு, கர்த்தரிடத்திற்கும், நெருக்க வழியையும் நோக்கிச் செல்லவும் உணர்த்தப்படுகிறது.

சித்தமே, நம்முடைய வாழ்க்கையின் தொடர் நிகழ்வுகளின் உண்மையான இயக்குனராக இருக்கிறது (தேவனுடைய பரிபாலனத்தின் கீழ்) என்பதை நாம் நினைவிற்கொள்ள வேண்டும். சித்தத்தை சரியாக வழிநடத்தி அதை நிலைநிறுத்துவதே எல்லாவற்றிலும் முக்கியமானது. பாவம் மற்றும் சுயநலத்தின் விசாலமான பாதையில், சுயநலத்திலும் இக்காலத்தில் தேவனிடமிருந்து விலகி ஜீவிக்கிற அநேகரில் ஒருவன் அவனுடைய ஸ்தானத்திற்கும், ஜீவியத்தின் ஓட்டத்திற்கும் முழுவதுமாக ஒத்திசைவில்லாத அநேக நற்குணங்களை அவனுடைய சரீர அமைப்பில் பெற்றிருக்கலாம்; ஆனாலும் வழிகாட்டவும், வழிநடத்தவும் சித்தமில்லாமல் அவன் கீழ்நோக்கிப் போகிறான். அதைப் போலவே நெருக்க வழியிலிருந்து கொண்டிருக்கும் சிலர், சடத்துவ, மானத, சன்மார்க்கரீதியான அநேக பரம்பரைக் குறைபாடுகளுடையவர்களாயிருக்கிறார்கள். அவைகள் தொடர்ந்தேர்ச்சியாய், அவர்களை விசாலமான பாதையை நோக்கி இழுக்கின்றன. ஆனால், கர்த்தருடைய நெருக்கமான வழியில் காக்கப்பட்டிருக்கிறார்கள். அவ்விதம் காக்கப்பட்டிருப்பது, மாம்சத்துக்குரிய சுயசித்தத்தினால் அல்ல, ஆனால் புதுப்பிக்கப்பட்ட சித்தத்தின் வல்லமையால் ஆகும். அதனால் வாலிப பிராயத்தில் நம்முடைய சித்தங்களை சரியான பாதையில் உறுதிப்படுத்துவது எவ்வளவு முக்கியமானதாயிருக்கிறது! இந்த தற்கால ஜீவியத்தில் எவ்வளவு அதிகமான ஆசீர்வாதங்களை நாம் அனுபவிக்கலாம். அதன் மூலம், இன்னும் எவ்வளவு அதிகமாக எதிர்கால ஜீவியத்திற்கான தகுந்த ஆயத்தங்களை நாம் செய்யலாம்!

நம்முடைய பாடத்தில் யோசியா ராஜா ஒவ்வொரு வாலிபரும் எடுத்துக் கொள்ள வேண்டிய மிகச் சரியான நடத்தையின் போக்கிற்கு ஒரு உதாரணமாயிருக்கிறார். தீங்கு நாட்களும் தீமையான அனுபவங்களும் வருவதற்கு முன்பே முதலாவதாக வாலிபப் பிராயத்தில் இருதயமானது கர்த்தருக்கென்று கொடுக்கப்பட வேண்டும். மீதியுள்ள ஜீவியம் அதனை ஒழித்துக்கட்ட ஏதுவானதாக, ஒருவன் தீமையை மிக அதிகமாக கற்றுக்கொள்வதற்கு முன்பே இதைச் செய்ய வேண்டும். அதன்பின்பு யோசியாவைப் போல், நீதிக்குரிய ஊழியஞ் செய்ய சந்தர்ப்பங்களை காலம் நமக்கு கொண்டு வரும்போது, சரியான காரியங்களுக்கு ஆதரவாக இருப்பதிலும், தவறான காரியங்களை நாம் எதிர்ப்பதிலும் நாம் முழுமனதுடன் இருப்போமாக; அத்துடன் எல்லாவற்றிலும் தேவனுக்கே முதலிடம் என்ற நோக்கத்துடன், தேவனுடைய துதிகளை அறிவிப்போமாக!

***

Visit us at : **www.biblestandardindia.com**

***For English Magazines, Volumes & Translated Tracts, Booklets & Tamil Magazines Contact :***

Bro. V. Vincent Jeyakumar

**Laymen's Home Missionary Movement**

32-D, Dr.Solomon Compound, Near Railway Gate, Nazareth - 628 617
Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincent.v31@gmail.com
Cell : 98949 26629

**FOR PRIVATE CIRCULATION ONLY**